# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC. 1/2018

**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : திரு. பூபதி |
| Father/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

5 வது எதிரி ஆஜரில் உள்ளார். 1 வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 2 மற்றும் 4 வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசாரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 175/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

**நான் சொன்னது போல் சொன்ன தேதியில் என்னுடைய வீட்டிலிருந்து எந்த ஒரு பொருளும் திருடுபோகவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய வீட்டிலிருந்து திருடுபோய்விட்டதாக பொய்யாக ஒரு புகாரை காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரியல்ல.**

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC. 1/2018

**P.W**.2 (LW2)

| | |
|---|---|
| Name | : **திருமதி.லட்சுமி** |
| Father/Husband Name | : திரு. பூபதி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

5வது எதிரி ஆஜரில் உள்ளார். 1வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 2 மற்றும் 4வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசாரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 175/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது நத்தம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி பூபதி என்னுடைய கணவர். சாட்சி பாலசுந்தரம் என்னுடைய மாமானர்.

2) கடந்த 12.07.2017ம் தேதி நானும் என் மாமியாரும் காலை 10.00 மணியளவில் ஏரி வேலைக்கு சென்று விட்டோம். என்னுடைய மாமனார் என்னுடைய சொந்தக்கார பெண்ணை கல்லூரியில் சேர்க்க வேண்டி சென்றிருந்தார். என் கணவரும் விவசாய வேலைக்கு சென்றுவிட்டார். நான் வீட்டின் கதவை பூட்டிவிட்டு சாவியை வழக்கம்போல் நாங்கள் வைக்கும் இடத்தில் வைத்துவிட்டு சென்றுவிட்டோம். பிறகு மதியம் 2

மணி அளவில் வீட்டிற்கு வந்து மற்ற வேலைகளை செய்துக் கொண்டிருந்தோம். இரவு 10.00 மணியளவில் நான் அணிந்திருந்த நகைகளை அலமாறியில் கழட்டி வைக்கும் போது தான் நகைகள் காணாமல் போயிருந்தது தெரிய வந்தது. 4 சவரன் டாலர் செயின், B என்று போடப்பட்ட மோதிரம் 1 சவரன், ½ மாட்டல் மற்றும் ¼ கம்மல் ஆகியவை காணாமல் போயிருந்தது. அதன் பிறகு மறுநாள் 13.07.2017 ம் தேதி காலை காவல் நிலையம் சென்று என் கணவர் புகார் கொடுத்தார். காணாமல் போன நகைகள் கிடைத்துவிட்டதாக போலிசார் தகவல் சொன்னதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன். நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுச் சென்ற டாலர் செயின், மாட்டல், கம்மல் ஆகியவைகளை இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன். **(டாலர் செயின், மாட்டல், கம்மல் ஆகியவைகள் அ.சா.பொ.1 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது).** காணாமல் போன B initial பதித்த 1 சவரன் தங்க மோதிரம் என் மகனின் கல்விக்காக வங்கியில் வைத்துள்ளேன். எனவே அதை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இயலவில்லை. மேற்படி டாலர் செயின், மாட்டல், கம்மல் ஆகியவைகளை இன்று நான் திரும்ப நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொள்கிறேன். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் திருடு எதுவும் போகவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டில் திருடுபோய்விட்டதாக தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC. 1/2018

**P.W**.3 (LW3)

| | |
|---|---|
| Name | : **திரு.பாலசுந்தரம்** |
| Father/Husband Name | : திரு. அப்பாதுரை |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

5 வது எதிரி ஆஜரில் உள்ளார். 1 வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 2 மற்றும் 4 வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 175/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது நத்தம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி பூபதி என்னுடைய மகன். சாட்சி லட்சுமி என்னுடைய மருமகள்.**

**2) கடந்த 12.07.2017 ம் தேதி நான் என்னுடைய சொந்தக்கார பெண்ணை கல்லூரியில் சேர்க்க வேண்டி சென்றுவிட்டேன். எனது மருமகளும், எனது மனைவியும் வீட்டை பூட்டிவிட்டு காலை 10.00 மணியளவில் ஏரி வேலைக்கு சென்றுவிட்டார்கள். என் மகன் விவசாய வேலைக்கு சென்றுவிட்டார். என் மருமகள் வீட்டின் கதவை பூட்டிவிட்டு சாவியை வழக்கம்போல் நாங்கள் வைக்கும் இடத்தில் வைத்துவிட்டு சென்றிருந்தார்.**

இரவு 10.00 மணியளவில் என் மருமகள் அணிந்திருந்த நகைகளை அலமாறியில் கழட்டி வைக்கும் போது தான் நகைகள் காணாமல் போய்விட்டது என்று என்னிடம் சொன்னார். என்னுடைய B initial போட்ட மோதிரம் ஒன்றும் மற்ற நகைகள் காணாமல் போய் இருந்தது. மற்ற நகைகளின் விவரங்கள் எனக்கு தெரியாது. மறுநாள் 13.07.2017 ம் தேதி காலை என் மகனும் மருமகளும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் திருடு எதுவும் போகவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டில் திருடுபோய்விட்டதாக தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC. 1/2018

**P.W**.4 (LW6)

| | |
|---|---|
| Name | : **திரு.ராஜசேகரன்** |
| Father/Husband Name | : திரு. மனோகர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

5 வது எதிரி ஆஜரில் உள்ளார். 1 வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 2 மற்றும் 4 வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 175/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் முள்ளிகொளத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி அருள்தாஸ் என்னுடைய கிராம உதவியாளர் ஆவார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான்.**

**கடந்த 20.08.2017 ம் தேதி மதியம் சுமார் 2.15 மணியளவில் திருக்கழுக்குன்றம் கருங்குழி சாலையில் உள்ள எம்.ஜி.ஆர் சிலை அருகே எதிரி சீதாலட்சுமி என்பவரை போலிசார் விசாரணை செய்துக் னகொண்டிருந்தார்கள். அப்போது சீதாலட்சுமி என்பவர் தான் திருடியதை**

ஒப்புக் கொண்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சாட்சி அருள்தாஸ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் "*என்னை அழைத்துச் சென்றால் நாங்கள் திருடிய அத்தனை இடங்களையும் அடையாளம் காட்டுவேன். தற்போது விற்பதற்காக எடுத்து வந்த நத்தம் கிராமத்தில் திருடிய நகைகளையும், பூந்தண்டலம் கிராமத்தில் திருடிய நகைகளையும் தங்களிடம் ஆஜர் படுத்துவேன். மேலும் கொத்திமங்களம் வள்ளுவர் தெருவில் திருடிய நகைகளையும், ஓரகடம் கிராமத்தில் திருடிய நகைகளையும் கல்பனா வீட்டில் மறைத்து வைத்துள்ளதை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்படுத்துவேன்*" என்றும் கூறினார். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதன் தொடர்ச்சியாக அதே நாள் மதியம் 14.40 மணியளவில் அதே இடத்தில் எதிரி சீதாலட்சுமி அவரிடமிருந்து எடுத்து ஆஜர் செய்த நகைகளை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும், சாட்சி அருள்தாஸ் என்பவரும் கையொப்பம் செய்தோம். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் தற்போது நத்தம் கரியச்சேரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். திருக்கழுக்குன்றம் எம்.ஜி.ஆர். சிலை உள்ள பகுதியான நான் பணிபுரிந்து வந்த முள்ளிக்கொளத்தூர் கிராம நிர்வாகத்திற்கு உட்பட்டதல்ல என்றால் சரிதான். திருக்கழுக்குன்றம் எம்.ஜி.ஆர். சிலை இருக்கும் இடமானது பொதுமக்கள் நடமாட்டம் அதிகம்

இருக்கும் என்றாலும் கடைகள் அதிகம் இருக்கும் என்றாலும் சரிதான். எதிரி சீதாலட்சுமியை போலிசார் மதியம் சுமார் 12.15 மணியளவில் விசாரணை செய்தார்கள். என்னுடைய அன்றாட அலுவலக பணிகள் குறித்து movement register–ரில் எழுதிவைத்துவிட்டு தான் செல்வேன் என்றால் நான் சொன்ன 20.08.2017 ஞாயிற்றுக் கிழமை என்பதால் movement register–ரில் குறிப்பிடவில்லை. நான் சொல்வது போல் எதிரி சீதாலட்சுமி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி சீதாலட்சுமி, எதிரி கல்பனாவிடம் நகைகளை கொடுத்து வைத்திருப்பதாக எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மகஜரில் கைப்பற்றப்பட்ட நகைகளின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நான் அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over
in the witness in the present of the accused
and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.